## 11th History Lesson 10 Questions in Tamil

## 10] முகலாயப் பேரரசு

1. முகலாயப் பேரரசு 1526 ஆண்டு பானிப்பட் போரில், பாபர் ____________ ஐ தோற்கடித்த பின் நிறுவப்பட்டது.
A) தௌலத்கான் லோடி
B) இப்ராகிம் லோடி
C) முகமது பின் துக்ளக்
D) காசிம் மாலிக்

2. ____________ ஆண்டு ஔரங்கசீப்பின் மறைவைத் தொடர்ந்து முகலாய பேரரசு வீழ்ச்சியடைந்தது.
A) 1698
B) 1702
C) 1707
D) 1709

3. சரியான இணையத் தேர்ந்தெடு.
1. உஸ்பெக்குகள் – துருக்கிய இனக்குழு
2. சபாவி – ஈரானை ஆட்சி செய்த அரச வம்சத்தினர், ஷியா முஸ்லீம் பிரிவை ஆதரித்தவர்கள்
3. உதுமானியத் துருக்கியர் – சன்னி முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர்கள்
A) அனைத்தும் சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 1, 3 சரி

4. கூற்று 1: வரலாற்று ரீதியாக மத்திய ஆசிய நாடுகள் பட்டுப்பாதை வழியாக இந்தியாவோடு செய்து வந்த வர்த்தகம் பாபருக்கு இந்தியாவை பற்றிய தகவல்களை வழங்கியது.
கூற்று 2: ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முன்னர் தைமூர் செய்தததை மீண்டும் செய்ய வேண்டுமெனக் கனவு கண்டு கொண்டிருந்த பாபர், தில்லி சுல்தானியம் அரசியல் ரீதியாகச் சிதைவுற்றதைத் தொடர்ந்து 1526ல் தில்லியைத் தலைநகராகக் கொண்டு முகலாயப் பேரரசை நிறுவுவதில் வெற்றிபெற்றார்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

5. பாபர் ___________ வயதில் தனது தந்தையிடமிருந்து சமர்கண்டை மரபுரிமைச் சொத்தாகப் பெற்றார்.
A) 11
B) 12
C) 13
D) 14

6. பாபர் ___________ ஆண்டுகளுக்கு இடையே பேரா, சியால்கோட் லாகூர் ஆகியவற்றின் மீது படையெடுத்து இந்துஸ்தானை கைப்பற்றும் உறுதியான எண்ணத்தை வெளிக்காட்டினார்.
A) 1509 – 1520
B) 1512 – 1528
C) 1519 – 1524
D) 1518 – 1520

7. கூற்று: பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வரவேண்டும் என்ற வேண்டுகோளோடு இப்ராகிம் லோடியின் எதிரியான தௌலத்கான் லோடியும், மேவாரின் அரசனும் ரஜபுத்திர அரசுகளின் கூட்டமைப்பின் தலைவருமான ராணா சங்காவும் பாபரிடம் தூதுக் குழுக்களை அனுப்பினர்.
காரணம்: லோடி வம்சத்தை சேர்ந்த தில்லி சுல்தான் இப்ராகிம் லோடி தன் நாட்டை விரிவுபடுத்த மேற்கொண்ட முயற்சிகள் ஆப்கானியர், ரஜபுத்திரர் ஆகியோரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன.
A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு
B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

8. கூற்று 1: பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது முதலில் தனக்கு உதவி செய்வதாக உறுதிகூறி பின்னர் பின் வாங்கிய தௌலத்கான் லோடியின் படைகளை டெல்லியில் வென்றார்.
கூற்று 2: பின்னர் பாபர் லோடியால் ஆளப்பட்ட பஞ்சாப்பை நோக்கித் திரும்பி, இப்ராகிம் லோடியின் பெரும்படையை பானிப்பட்டில் தோற்கடித்தார்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

9. பீரங்கியைப் பயன்படுத்தும் ராணுவப் படைப்பிரிவு ___________ ஆகும்.
A) Territory
B) Artillery
C) Artifact
D) Firepower

10. வெடிமருந்து முதன்முதலில் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டு ___________ நூற்றாண்டில் ஐரோப்பாவை அடைந்தது.
A) கி.பி 11
B) கி.பி 12
C) கி.பி 13
D) கி.பி 14

11. 1527ஆம் ஆண்டு நடைபெற்ற கான்வா போர் பாபருக்கும் ____________க்கும் இடையே நடைபெற்றது.
A) ராணா பிரதாப் சிங்
B) ராணா சங்கா

C) ராஜா ஹரிசிங்

D) ஹுமாயூன்

12. கான்வா போரில் ரானா சங்காவுக்கு உதவியவர்கள் யார்?

1. ஆப்கன் முஸ்லீம்கள் 2. முகமது லோடி

3. மேவாட்டின் அரசன் ஹசன்கான் மேவாட்டி 4. இப்ராகிம் லோடி

A) 1, 2, 3

B) 2, 3, 4

C) 1, 3, 4

D) 3, 4

13. பாபருக்கும் மேதினிராய்க்கும் இடையே சந்தேரி போர் _________ ஆண்டு நடைபெற்றது.

A) 1527

B) 1528

C) 1529

D) 1530

14. ஆப்கானியர்களுக்கு எதிராக பாபர் மேற்கொண்ட இறுதிப்போர்

A) கான்வா போர்

B) காக்ரா போர்

C) சந்தேரி போர்

D) பானிபட் போர்

15. கூற்று 1: காக்ரா போரின்போது போது சுல்தான் இப்ராகிம் லோடியின் சகோதரனான முகம்மது லோடியும் அவரது மருமகனான சுல்தான் நஸ்ரத்ஷாவும் பாபருக்கு எதிராகச் சதி செய்தனர்.

கூற்று 2: காக்ரா போரில் வெற்றி பெற்ற பாபர் ஆக்ராவிலிருந்து திரும்பி லாகூர் செல்லும் வழியில் 1529இல் காலமானார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

16. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. முகலாயப் பேரரசை நிறுவிய பாபர் பாரசீக அராபிய மொழிகளில் புலமை பெற்றவராவார்.

2. தனது வாழ்க்கையைப் பற்றிய பாபரின் நினைவுக் குறிப்புகளான துசுக் – இ – பாபுரி (பாபர் நாமா) உலகச் செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது.

3. பாபர் தனது மகன் ஹுமாயூனுக்கு இடர்பாடுகள் நிறைந்த பணியை விட்டுச் சென்றார்.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

17. ஹீமாயூனின் சகோதரரான கம்ரான் பொறுப்பு வகித்த பகுதிகள்?

1. பீகார் 2. காபூல்

3. குஜராத் 4. காந்தகார்

A) அனைத்தும்

B) 1, 2

C) 1, 3

D) 2, 4

18. ஹுமாயூன் _________ ஆண்டு தௌரா என்னுமிடத்தில் ஆப்கானியரைத் தோற்கடித்து பலம் வாய்ந்த சுனார் கோட்டையை முற்றுகையிட்டார்.

A) 1529

B) 1530

C) 1531

D) 1532

19. ஷெர்கான் (ஷெர்ஷா) என்பவரின் தலைமையில் ஆப்கானியரின் அதிகாரம் வளர்ந்து வந்த பகுதிகள்

1. டெல்லி 2. தௌலதாபாத்

3. பீகார் 4. உத்திரப் பிரதேசம்

A) அனைத்தும்

B) 1, 2

C) 2, 3

D) 3, 4

20. தில்லியில் 'தீன்பனா' என்ற புதிய நகரை உருவாக்கியவர்

A) பாபர்

B) ஷெர்ஷா

C) ஹுமாயூன்

D) கம்ரான்

21. பகதூர்ஷாவின் மேல் போர் தொடுத்து குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றி அவற்றை ___________ன் பொறுப்பில் விட்டார்.

A) கம்ரான்

B) அஸ்காரி

C) ஹிண்டால்

D) ஷெர்ஷா

22. ஷெர்கானை எதிர் கொள்வதற்காக ஹுமாயூன் கவுர் அல்லது கௌடா என்ற இடத்தை அடைந்தபோது கலகத்தில் ஈடுபட்டவர்

A) கம்ரான்

B) அஸ்காரி

C) ஹிண்டால்

D) பகதூர் ஷா

23. சௌசா போர் பற்றிய கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடு.

1. இப்போரில் 7000 முகலாயப் பிரபுக்களும் வீரர்களும் கொல்லப்பட்டனர்.

2. தன்னுயிரைக் காத்துக் கொள்ளத் தப்பியோடிய ஹுமாயூன் கங்கை நதியை நீந்திக் கடந்தார்.

3. ஆக்ராவை சென்றடைந்த ஹுமாயூன், சகோதரர்கள் அஸ்காரி, ஹிண்டால் ஆகியோரின் உதவியோடு ஷெர்கானை எதிர்கொள்ள படையொன்றைத் திரட்டினார்.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

24. சௌசா போரைத் தொடர்ந்து ஹுமாயூன் ஷெர்ஷா இடையேயான இறுதி மோதல் ___________ல் நடைபெற்றது.

A) வங்காளம்

B) ஆக்ரா

C) கன்னோசி

D) சௌசா

25. கன்னோசி போரில் தோல்வியடைந்த ஹுமாயூன் தனது அரியணையை துறந்த பின்னர் மீண்டும் தில்லியைக் கைப்பற்றித் தன் அதிகாரத்தை மீட்ட ஆண்டு

A) 1545

B) 1548

C) 1553

D) 1555

26. ஒரு ஜாகீர்தாரின் குடும்பத்தில் பிறந்து பரித் என்றழைக்கப்பட்டவர்

A) அக்பர்

B) பாபர்

C) ஷெர்கான்

D) ஜஹாங்கீர்

27. ஷெர்ஷா குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

A) தன் திறமையினாலும் ஆற்றலினாலும் இந்தியாவிலிருந்த ஆப்கானியரின் தலைவரானார்.

B) மாளவம் போரிடாமலேயே ஷெர்ஷாவிடம் வீழ்ந்தது.

C) மேவாரின் உதய்சிங் எதிர்ப்பேதும் தெரிவிக்காமல் ஷெர்ஷாவிடம் சரணடைந்தார்.

D) கலிஞ்சாரைக் கைப்பற்ற வேண்டும் என்ற முயற்சியில் ஷெர்ஷா வெற்றிபெற்றார்.

28. வெடிகுண்டு விபத்தின் காரணமாக ஷெர்ஷா உயிரிழந்த ஆண்டு

A) 1544

B) 1545

C) 1549

D) 1553

29. விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர்குலைவான் என நம்பியவர்

A) பாபர்

B) அக்பர்

C) ஷாஜகான்

D) ஷெர்ஷா

30. ஹுமாயூனைப் பின்தொடர்ந்த ஷெர்ஷா அதற்கு முன்னர் ____________ என்பவரை வங்காளத்தின் ஆளுநராக நியமித்திருந்தார்.

A) இஸ்லாம்ஷா

B) பகதூர்ஷா

C) கிசிர்கான்

D) ஹிண்டால்

31. ஷெர்ஷாவின் சீர்திருத்தங்களில் தவறானதை தேர்ந்தெடு.

A) நிலங்கள் முறையாக அளவை செய்யப்பட்டு நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.

B) சிந்து பகுதியிலிருந்து வங்காளத்தில் சோனார்கான் வரையிலான முக்கிய பெருவழியைச் செப்பனிட்டதோடு குஜராத் கடற்கரைத் துறைமுகங்களை ஆக்ராவோடும் ஜோத்பூரோடும் இணைக்கும் புதிய சாலைகளை அமைத்தார்.

C) ஷெர்ஷாவுடைய நாணய முறையானது முகலாயர் காலம் முழுவதும் பின்பற்றப்பட்டு ஆங்கிலேயர் காலத்து நாணய முறைக்கு அடித்தளமானது.

D) ஷெர்ஷா காலத்தில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் முற்றிலும் ஒழிக்கப்பட்டன.

32. கீழ்க்கண்டவற்றுள் ஷெர்ஷா காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் எவை?

1. நுழைவு வரி 2. வருமான வரி

3. விற்பனை வரி 4. ஏற்றுமதி வரி

A) அனைத்தும்

B) 1, 2

C) 2, 3

D) 1, 3

33. ஷெர்ஷா காலத்தில் அனைத்து சாலைகளிலும் ___________ எனப்படும் சத்திரங்கள் அமைக்கப்பட்டு வணிகர்கள் தங்கவும் உணவருந்தவும் வசதிகள் செய்துதரப்பட்டன.

A) சன்னி

B) ஜாகீர்

C) சராய்

D) இலாகி

34. ஷெர்ஷா தன்னுடைய கல்லறை மாடத்தை ___________ என்னுமிடத்தில் கட்டினார்.

A) புராணகிலா

B) சசாரம்

C) டெல்லி

D) ஆக்ரா

35. ஷெர்ஷா 1545 இல் காலமான பின்னர் அவருக்கு பின் வந்த வலிமை குன்றிய அரசர்கள் __________ ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

A) 8

B) 10

C) 15

D) 18

36. கன்னோசிப் போரில் தோற்று தப்பியோடிய ஹுமாயூன் ___________ல் தஞ்சம் புகுந்தார்.

A) காபூல்

B) காந்தகார்

C) பாரசீகம்

D) ஈரான்

37. "வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹீமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்" என்பது யாருடைய வார்த்தைகள்

A) அமீர் குஸ்ரு

B) அமீர் ஹாசன்

C) குலாம் ரசூல்

D) ஸ்டேன்லி லேன்பூல்

38. ஜலாலுதீன் என்று அறியப்பட்ட அக்பர் பிறந்த ஆண்டு

A) 1539

B) 1540

C) 1541

D) 1542

39. கூற்று 1: பதினோறாவது வயதில் அக்பருக்கு முடிசூட்டப்பட்டது.

கூற்று 2: அக்பர், பைராம்கான் என்ற தலைசிறந்த பாதுகாவலரை பெற்றிருந்தார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

40. அக்பர் ஹெமு இடையே இரண்டாம் பானிபட் போர் எப்போது நடைபெற்றது?

A) 1556 ஆகஸ்ட்

B) 1556 அக்டோபர்

C) 1556 நவம்பர்

D) 1556 டிசம்பர்

41. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. தில்லியில் வீற்றிருந்த ஷெர்ஷாவின் வழிவந்த ஆப்கானிய அரசன் அடில்ஷாவின் இந்து படைத்தளபதியான ஹெமு, முகலாயருக்கு எதிராக ஆப்கானியர் படைகளுக்கு தான் தலைமையேற்றுச் செல்ல அனுமதிக்குமாறு அரசனைக் கேட்டுக்கொண்டார்.

2. அரசர் ஹெமுவிற்கு ஊக்கம் அளிக்கவே, ஹெமு முதலில் குவாலியரைக் கைப்பற்றி அதன் முகலாய ஆளுநரை வெளியேற்றினார்.

3. அடுத்து எவ்வித எதிர்ப்புமின்றி ஆக்ராவைக் கைப்பற்றினார்.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 1 மட்டும் சரி

D) 2, 3 சரி

42. கூற்று 1: அக்பரின் முதல் நான்காண்டு ஆட்சிக்காலத்தில் பகர ஆளுநர் பைராம்கானின் கீழ், நாடு குவாலியர், அஜ்மீர் உட்பட காபூலிலிருந்து ஜான்பூர் வரை விரிவடைந்தது.

கூற்று 2: பைராம்கான் அறிவுக் கூர்மை மிக்க மேதையாக கான் – இ – கானான் என்ற பட்டத்துடன் அக்பரின் அவையில் ஒளிர்ந்தார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

43. அக்பர் ___________ ஆண்டு மாளவத்தை பாஜ்பகதூரிடமிருந்து கைப்பற்றினார்.

A) 1560

B) 1562

C) 1564

D) 1566

44. இந்தியாவின் மையப் பகுதியிலிருந்த கோண்டுவானா ___________ ஆண்டு அக்பரால் கைப்பற்றப்பட்டது.

A) 1560

B) 1563

C) 1564

D) 1566

45. கூற்று 1: அக்பர், மேவார் அரசரான ராணா உதய்சிங்கிடமிருந்து சித்தூரை ஆறுமாதகால முற்றுகைக்கு பின்னர் கைப்பற்றினார்.

கூற்று 2: ராணா உதய்சிங்கின் தளபதிகளான ஜெய்மால், பட்டா ஆகியோரின் துணிச்சலைக் கண்டு பெரும் வியப்படைந்த அக்பர் அவர்களின் நினைவாகவும் அவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும் ஆக்ரா கோட்டையின் பிரதான வாசலில் அவர்களின் சிலைகளை நிறுவினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

46. அக்பர் __________ ஆண்டு முசாபர்ஷாவிடமிருந்து குஜராத்தைக் கைப்பற்றினார்.

A) 1568

B) 1570

C) 1572

D) 1573

47. பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளை ஆண்டு வந்த தாவுத்கான் அக்பரால் தோற்கடிக்கப்பட்டு அவ்விரு பகுதிகளும் ___________ ஆண்டு முகலாய பேரரசோடு இணைக்கப்பட்டன.

winmeen.com

A) 1574

B) 1575

C) 1576

D) 1577

48. கூற்று 1: ராஜா மான்சிங், பகவன்தாஸ் ஆகியோரின் உதவியுடன் அக்பர் காபூலைச் சேர்ந்த மிர்சா ஹக்கீமைத் தோற்கடித்தார்.

கூற்று 2: 1586 ஆம் ஆண்டு காஷ்மீரையும் 1590 ஆம் ஆண்டு சிந்துவையும் அக்பர் கைப்பற்றியது வடமேற்கில் அவருடைய பேரரசை வலுப்படுத்தியது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

49. அக்பருடைய படைகள் ___________ ஆண்டு காண்டேஷ் பகுதியைக் கைப்பற்றின.

A) 1591

B) 1592

C) 1593

D) 1594

50. அக்பரின் படைகள் சாந்த்பீபியிடமிருந்து பெராரை கைப்பற்றிய ஆண்டு ___________.

A) 1592

B) 1594

C) 1596

D) 1598

51. 1604 இல் செப்டம்பர் மாதம் அக்பர் நோய்வாய்ப்பட்டு __________ நாள் இயற்கை எய்தினார்.

A) 1604 அக்டோபர் 21

B) 1605 மார்ச் 18

C) 1605 ஆகஸ்ட் 28

D) 1605 அக்டோபர் 27

52. அக்பர் குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

A) முஸ்லீம் அல்லாத மக்களின் மீது விதிக்கப்பட்டிருந்த ஜிசியா வரியையும் (தலைவரி) இந்து புனித யாத்திரைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியையும் நீக்கினார்.

B) இந்து விதவைகள் பின்பற்றிய உடன்கட்டை ஏறும் முறை ஒழிக்கப்பட்டது.

C) அக்பருடை காலத்தில் போர்க்கைதிகளை அடிமைகளாக்கும் நடைமுறை கைவிடப்பட்டது.

D) மேவார், மார்வார் ஆகிய ரஜபுத்திர அரசுகள் முகலாய பேரரசின் நட்பு நாடுகளாக திகழ்ந்தன.

53. ஆம்பர் நாட்டு அரசர் ராஜா பார்மல் (பீகாரிமால் என்று அறியப்பட்டவரின்) மகளான ஹர்க்கா பாயை மணந்தவர்

A) ராஜா பகவன்தாஸ்

B) ராஜா மான்சிங்

C) அக்பர்

D) ஹுமாயூன்

54. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. பிக்கானீர், ஜெய்சால்மர் ஆகிய ரஜபுத்திர அரசுகளின் இளவரசிகளை அக்பர் திருமணம் செய்து கொண்டார்.

2. ஹர்க்காபாய் பெற்றெடுத்த இளவரசர் சலீம் பின்னர் ராஜா பகவன்தாஸின் மகளைக் கரம்பற்றினார்.

3. ராஜா பகவான்தாஸின் மகனான ராஜா மான்சிங் அக்பரின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதியானார்.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

55. முகலாயப் படைகளுக்கும் ராணா பிரதாப் சிங்குக்குமிடையே நடைபெற்ற நேரடி போர்

A) கான்வா போர்

B) சௌசா போர்

C) ஹால்டிகாட் போர்

D) இரண்டாம் பானிபட் போர்

56. ராணா உதய்சிங்கின் மரணத்திற்கு பின்னர் அவருடைய மகன் ராணா பிரதாப்சிங் அக்பரின் அதிகாரத்தை ஏற்காமல் ___________இல் தனது மரணம் வரை தொடர்ந்து போரிட்டார்.

A) 1578

B) 1586

C) 1592

D) 1597

57. தொடக்கத்தில் ___________ அக்பரின் தலைநகராக இருந்தது.

A) குவாலியர்

B) டெல்லி

C) ஆக்ரா

D) பதேபூர்சிக்ரி

58. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. ஷெர்ஷா அறிமுகப்படுத்திய மன்சப்தாரி முறையை அக்பர் மேலும் விரிவுப்படுத்தினார்.

2. பிரபுக்கள், குடிமைப் பணிசார்ந்த இராணுவ நிர்வாகம் சார்ந்த அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே பணியின் கீழ் கொண்டுவரப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

3. மன்சப்தார் தகுதி ஜாட், சவார் என இருவகைப்பட்டது.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

59. கூற்று 1: மன்சப்தாரி முறையில் ஜாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரும் பெறும் ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதாகும்.

அவ்வெண்ணிக்கை 10 முதல் 10000 வீரர்கள் வரை ஆனதாகும்.

கூற்று 2: சவார் என்பது மன்சப்தாரின் கீழிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

60. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) அக்பரின் தொடக்கக் காலங்களில் பிரபுக்கள் முற்றிலுமாக மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களாகவும் பாரசீகத்தை சார்ந்தவர்களாகவும் மட்டுமே இருந்தனர்.

B) மன்சப்தாரி முறை அறிமுகமான பின்னர் ரஜபுத்திரரும் ஷேக்சதா என்றழைக்கப்பட்ட இந்திய முஸ்லீம்களும் பிரபுக்கள் வரிசையில் இடம் பெறலாயினர்.

C) மன்சப்தார்களின் ஊதியம் பணமாக நிர்ணயம் செய்யப்பட்டாலும் அதற்கு மாறாக அவர்களுக்கு நிலங்கள் (ஜாகீர்) ஒதுக்கப்பட்டன.

D) மன்சப்தார் முறை பரம்பரை உரிமையாக காணப்பட்டது.

61. அக்பரின் மதக்கொள்கை குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

A) அக்பர், சூபி தத்துவங்கள் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக ஓர் இணக்கமான போக்கை மேற்கொண்டார்.

B) அக்பா அனைவருக்கும் அமைதி (சுல்க் – இ – குல்) என்னும் தத்துவத்தைப் பரப்புரை செய்தார்.

C) அக்பர் இபாதத்கானா எனும் வழிபாட்டுக் கூடத்தை நிறுவினார்.

D) இபாதத் கானாவில் நடைபெற்ற விவாதங்கள் மதங்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியதால் 1578 இல் அக்பர் அவ்விவாதங்களை நிறுத்தினார்.

62. அக்பர் இஸ்லாமைப் புறக்கணித்தார் என குற்றம் சாட்டிய அக்பர் காலத்து வரலாற்று அறிஞர்

A) நூனிஸ்

B) பதானி

C) ராஜா தோடர்மால்

D) ராஜா பீர்பால்

63. கூற்று 1: அக்பருடைய தத்துவத்தை விளக்குவதற்கு அக்பரும் பதானியும் பயன்படுத்திய சொல் 'தௌகித் – இ – இலாகி' (தீன் இலாகி) என்பதாகும்.

கூற்று 2: தௌகித் – இ – இலாகி என்ற சொல்லின் நேரடிப் பொருள் தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

64. கூற்று 1: சமஸ்கிருத, அராபிய, கிரேக்க மற்றும் ஏனைய மொழி நூல்களைப் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்வதற்காக ஒரு பெரிய மொழியாக்கத் துறையை அக்பர் உருவாக்கினார்.

கூற்று 2: இராமாயாணம், மகாபாரதம், அதர்வவேதம், விவிலியம், குரான் ஆகியவை அனைத்தும் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

65. ஜஹாங்கீர் அரசரானதை எதிர்த்து அவரது மூத்தமகன் குஸ்ரு சீக்கிய குரு___________ன் ஆதரவோடு கலகத்தில் இறங்கினார்.

A) குரு கோபிந்த் சிங்

B) குரு தேஜ் பகதூர்

C) குரு அர்ஜுன் தேவ்

D) குரு ராம்தாஸ்

66. தக்காண அரசான அகமது நகர் மாலிக் ஆம்பரின் தலைமையின் கீழ் தன்னை சுதந்திர அரசாக அறிவித்த ஆண்டு

A) 1603

B) 1606

C) 1608

D) 1609

67. கூற்று 1: வங்காளத்தில் தனக்கெதிராகக் கலகம் செய்த ஆப்கானியரான உஸ்மான் கான் என்பவரை ஜஹாங்கீர் பணிய வைத்தார்.

கூற்று 2: ராணா உதய்சிங், ராணா பிரதாப் சிங் ஆகியோர் காலத்தில் முகலாயருக்கு அடிபணிய மறுத்த மேவார் ராணா உதய்சிங்கின் பேரன் ராணா அமர்சிங்கிற்கு எதிராக ஜஹாங்கீர் தனது மகன் இளவரசர் குர்ரம் தலைமையில் படையெடுப்பு நடத்தி ஒழுங்குக்கு கொண்டுவரப்பட்டது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

68. 1595 இல் பாரசீகர்களிடமிருந்து அக்பரால் கைப்பற்றப்பட்ட காந்தகாரை _________இல் பாரசீக அரசர் ஷா அப்பாஸ் மீட்டிருந்தார்.

A) 1602

B) 1614

C) 1619

D) 1622

69. தாமஸ் ரோ இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் அனுப்பிய தூதுவராய் ___________ நகரில் ஒரு வணிக குடியேற்றத்தை அமைத்து கொள்வதற்கான அனுமதியை ஜஹாங்கீரிடம் பெற்றார்.

A) கோவா

B) வங்காளம்

C) ஆக்ரா

D) சூரத்

70. ஜாகீர்தாரி முறை குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

1. இது ஒரு நில உடைமை முறையாகும்.

2. தில்லி சுல்தானியர் காலத்தில் இம்முறை வளர்ச்சி பெற்றது.

3. இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வரிவசூல் செய்கின்ற அதிகாரமும் அப்பகுதியை நிர்வகிக்கிற அதிகாரமும் அரசாங்கத்தை சேர்ந்த ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 1, 3 சரி

D) 2, 3 சரி

71. கூற்று 1: பாரசீக மொழியில் ஜமீன்தார் என்ற வார்த்தைக்கு நிலத்தின் உடைமையாளர் என்று பொருள்.

கூற்று 2: முகலாயர் காலத்தில் பிரபுக்கள் வர்க்கத்தை சேர்ந்தோரே ஜமீன்தார்களாக இருந்தனர். அக்பர் பிரபுக்களுக்கும் முந்தைய அரச குடும்பங்களின் வழித்தோன்றல்களுக்கும் நிலங்களை வழங்கி அவற்றை பரம்பரையாக அனுபவிக்கும் உரிமையையும் வழங்கினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

72. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. தக்காணத்தில் முஸ்லீம்களும் மராத்தியர்களும் தங்கள் அரசியல் மற்றும் பிராந்தியத் தனித்தன்மைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒருங்கிணைந்து முகலாயரின் மேலாதிக்கத்தை எதிர்த்தனர். இதன் பின்னே மூளையாக செயல்பட்டவர் மாலிக் ஆம்பர்.

2. 1624 இல் மே 14 இல் மாலிக் ஆம்பர் தன்னுடைய 78ஆம் வயதில் மரணமடைந்த போது அவரால் பயிற்றுவிக்கப்பட்ட மராத்தியர்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாக மாறினர்.

3. எத்தியோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு ஓர் அடிமையாக கொண்டுவரப்பட்டவர் மாலிக் ஆம்பர்.

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

C) 2, 3 தவறு

D) 3 மட்டும் தவறு

73. கூற்று: ஜஹாங்கீரின் பாரசீக மனைவி மெகருன்னிசா அரியணையின் பின்னே உண்மையான அதிகாரம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

காரணம்: ஜஹாங்கீர் அரசு விஷயங்களைக் காட்டிலும் கலை, ஓவியம், தோட்டம், மலர்கள் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

74. கூற்று 1: ஜஹாங்கீர் இறந்தவுடன் நூர்ஜகான் தன் மருமகன் ஷாரியர் என்பவருக்கு மணிமுடி சூட்ட முயன்றார்.

கூற்று 2: நூர்ஜகானின் சகோதரரும் குர்ரமின் மாமனாருமான ஆசப்கான் மேற்கொண்ட முயற்சிகளால் குர்ரம் ஷாஜகான் என்ற பெயருடன் அடுத்த முகலாய அரசராக அரியணை ஏறினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

75. பத்து ஆண்டுகள் நாட்டையாண்ட நூர்ஜகான், __________இல் ஜஹாங்கீரின் இறப்புக்குப் பின்னர் அதிகாரத்தையும் செல்வாக்கையும் இழந்தார்.

A) 1623

B) 1625

C) 1627

D) 1631

76. ஆசப்கானின் சகோதரியும் ஷாஜகானின் முன்னாள் எதிரியுமான நூர்ஜகான்___________ வரை உயிரோடிருந்தார்.

A) 1641 நவம்பர்

B) 1643 அக்டோபர்

C) 1644 செப்டம்பர்

D) 1645 டிசம்பர்

77. ஷாஜகான் ஆட்சியின் தொடக்கத்தில் தெற்கு பிராந்தியங்களின் ஆளுநராக இருந்தவர்

A) கான்ஜகான்

B) இரண்டாம் மூர்தசா

C) இராதத்கான்

D) ஆசம்கான்

78. கான்ஜகான் ஷாஜகானுக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டதால் அவரை தொடர்ந்து ___________ என்பவர் தக்காணத்தின் ஆளுநராக அமர்த்தப்பட்டார்.

A) பிர்லோடி

B) இரண்டாம் மூர்தசா

C) இராதத்கான்

D) ஆகம்கான்

79. கான்ஜகான் தௌலதாபாத்திலிருந்து தப்பி மாளவம் சென்றதும் தக்காணத்தில் அமைதி நிலவியது. பின்

ஷாஜகான் தக்காணத்தை விட்டு செல்லும் முன்பாக அப்பகுதியை__________ மாநிலங்களாகப் பிரித்தார்.

A) 2

B) 3

C) 4

D) 5

80. தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. கோல்கொண்டா – குதுப்ஷாகி

2. பீஜப்பூர் – அடில்ஷாஹி

3. பெரார் – இமத்ஷாஹி

4. பீடார் – பரித்ஷாஹி

5. அகமதுநகர் – நிஜாம்ஷாஹி

A) 2, 4 தவறு

B) 1, 3 தவறு

C) 1, 3, 5 தவறு

D) எதுவுமில்லை

81. ஷாஜகான் மகபத்கானின் உதவியோடு அகமதுநகரின் நிஜாம் ஷாஹி அரசர்களைப் பணியச் செய்த ஆண்டு

A) 1626

B) 1632

C) 1636

D) 1642

82. அல்புகர்க் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து __________ ஆண்டு கோவாவைக் கைப்பற்றி அதைக் கீழ்த்திசை போர்த்துகீசியப் பேரரசின் தலைநகராக்கினார்.

A) 1508

B) 1509

C) 1510

D) 1512

83. பொருத்துக. (டச்சுக்காரர்களின் வணிக நிலையங்கள் அமைக்கப்பட்ட ஆண்டு)

1. மசூலிப்பட்டினம் – i) 1605

2. புலிக்காட் – ii) 1610

3. சூரத் – iii) 1616

4. பிமிலிபட்டினம் – iv) 1641

A) i ii iv iii v

B) ii iv iii i v

C) ii i iii v iv

D) ii i iii iv v

84. தவறான இணையைத் தேர்ந்தெடு (டச்சுக்காரர்களின் வணிக நிலையங்கள் அமைக்கப்பட்ட ஆண்டு)

A) காரைக்கால் – 1645

B) சின்சுரா – 1653

C) கொச்சி – 1663

D) பாலசோர் – 1656

85. டேனியர்கள் தரங்கம்பாடியில் குடியேற்றத்தை நிறுவிய ஆண்டு

A) 1605

B) 1616

C) 1618

D) 1620

86. தவறான இணையைத் தேர்ந்தெடு. (பிரெஞ்சுக்காரர்களின் தொடக்க காலக் குடியேற்றங்கள் – அமைக்கப்பட்ட ஆண்டு)

A) சூரத் – 1668

B) மசூலிப்பட்டினம் – 1669

C) புதுச்சேரி – 1673

D) சந்தன்நகர் (வங்காளம்) – 1680

87. மலபாரில் உள்ள மாஹி, சோழ மண்டல கடற்கரையில் உள்ள ஏனாம் ஆகியவை பிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்ட ஆண்டு

A) 1715

B) 1721

C) 1725

D) 1728

88. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி சூரத்தில் வணிக நிறுவனத்தை அமைத்த ஆண்டு

A) 1610

B) 1611

C) 1612

D) 1613

89. பிரான்ஸ் அரசன் XIV ஆம் லூயியின் சமகாலத்து அரசனான ஷாஜகான் ___________ ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

A) 20

B) 22

C) 25

D) 30

90. பொருத்துக. (ஷாஜகான் ஆட்சியில் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்கள்)

1. பெர்னியர் – i) இத்தாலிய எழுத்தாளர், பயணி

2. தாவர்னியர் – ii) இங்கிலாந்து வணிகர்

3. மான்டெல்சோ – iii) ஜெர்மன் பயணி, துணிச்சல் வீரர்

4. பீட்டர்முன்டி – iv) பிரெஞ்சு வைர வியாபாரி, பயணி

5. மனுச்சி – v) பிரெஞ்சு மருத்துவர், பயணி

A) i ii iii iv v

B) ii iii i v iv

C) v iv iii ii i

D) v iii ii iv i

91. தாராஷுகோ குறித்த கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடு.

1. தாராஷுகோ சன்னி இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்தவராயினும் சூபி தத்துவங்களின் மேல் ஆர்வம் கொண்டிருந்தார்.

2. தில்லி அரியணைக்கான வாரிசுரிமைப் போரில் ஔரங்கசீப்பிடம் தோற்றுப்பான தாராஷூகோ தத்துவஞான இளவரசர் என அறியப்பட்டார்.

3. தாராஷூகோ சமஸ்கிருத மொழியிலமைந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்.

4. பல்வேறு பண்பாடுகளை உரையாடலுக்கு உட்படுத்திய தாராஷூகோ இந்து மதத்திற்கும் இஸ்லாத்துக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் கண்டறிந்தார்.

A) அனைத்தும் சரி

B) 1, 2, 3 சரி

C) 1, 2, 4 சரி

D) 2, 3, 4 சரி

92. கூற்று 1: தாஜ்மஹால் இந்தியப் பாரசீக இஸ்லாமியக் கட்டடக் கலைகளின் கூட்டுக் கலவையாகும்.

கூற்று 2: பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த இந்தியராகிய உஸ்தத் அகமத் லஹாவ்ரி என்பவர் தலைமை கட்டடக்கலை நிபுணராக இருந்தாலும் தாஜ்மகாலுக்கான வரைபடத்தை தயாரித்த பெருமை அக்காலக்கட்டத்தை சேர்ந்த கட்டடக்கலை நிபுணர்களைச் சாரும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

93. தாஜ்மகால் குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

1. தாஜ்மகாலின் கட்டிட வேலைகள் 1632 இல் தொடங்கின.

2. இந்தியா, பாரசீகம், உதுமானியப் பேரரசு, ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கல்லறை மாடப் பணியை 1638 – 39இல் முடிப்பதற்காகப் பணியமர்த்தப்பட்டனர்.

3. அருகிலுள்ள ஏனைய கட்டடங்கள் 1643 இல் முடிவடைந்தன.

4. அலங்கார வேலைகள் குறைந்தபட்சம் 1644 வரை தொடர்ந்தது.

A) 1 மட்டும் தவறு

B) 2, 3 தவறு

C) 1, 4 தவறு

D) 4 மட்டும் தவறு

94. ஔரங்கசீப்பால் வீட்டு சிறையிலடைக்கப்பட்ட ஷாஜகான் அரண்மனைக் கைதியாகவே இருந்து எப்போது மரணமடைந்தார்?

A) 1665 ஜனவரி

B) 1665 செப்டம்பர்

C) 1666 ஜனவரி

D) 1666 செப்டம்பர்

95. ஔரங்கசீப் ஆலம்கீர் வாரிசுரிமைப் போரில் அரியணைக்காகத் தன்னோடு போட்டியிட்ட தாராஷூகோ, ஷூஜா, முராத் ஆகியோரை வெற்றிக் கொண்டு __________ ஆண்டு அரியணை ஏறினார்.

A) 1652

B) 1657

C) 1658

D) 1659

96. ஔரங்கசீப் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.

A) ஔரங்கசீப் தனது ஐம்பது ஆண்டுகால ஆட்சியில் முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வட இந்திய அரசியலில் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தார்.

B) ஔரங்கசீப் ஆட்சியின் தொடக்கத்தில் தக்காணப் பகுதி அவருடைய ஆளுநர்களின் கைகளில் விடப்பட்டிருந்தன.

C) 1681இல் ஔரங்கசீப்புடைய மகன்களில் ஒருவரான இளவரசர் அக்பர் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாய் ஔரங்கசீப் தக்காணம் சென்று மீண்டும் தில்லிக்கு திரும்பவில்லை.

D) ஔரங்கசீப் அகமதுநகரில் 1705இல் காலமானார்.

97. ஔரங்கசீப் ஆட்சியின் தொடக்கத்தில் ___________ அவரின் தலைநகராக அமைந்தது.

A) ஆக்ரா

B) குவாலியர்

C) அலகாபாத்

D) ஷாஜகானாபாத்

98. வட இந்தியாவில் ஔரங்கசீப்பிற்கு எதிராக கலகம் செய்தவர்கள் யார்?

1. ஜாட் 2. சத்னாமியர்

3. சீக்கியர் 4. ஈரானியர்

A) 1, 2, 3

B) 2, 3, 4

C) 1, 3, 4

D) 1, 2, 4

99. மார்வாரில் ஜஸ்வந்த் சிங்கின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வாரிசுரிமை சிக்கல் காரணமாக ஔரங்கசீப் _________ என்பவரை பெயரளவிற்கு அரச பதவியில் அமர்த்த முயற்சி மேற்கொண்டார்.

A) ராணி ஹாடி

B) இந்திர சிங்

C) ராஜ் சிங்

D ஜெய் சிங்

100. மார்வார் அரசியலில் ஔரங்கசீப் தலையிட்டதால் வெறுப்பு கொண்ட மேவார் ராணாவான _________ என்பவர் கலகத்தில் ஈடுபட்டார்.

A) ராணி ஹாடி

B) இந்திர சிங்

C) ராஜ் சிங்

D ஜெய் சிங்

101. மேவாரின் புதிய ராணாவாக ராணா ஜெய்சிங் பதவியேற்ற ஆண்டு
A) 1680
B) 1681
C) 1682
D) 1683

102. ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கையின் நோக்கம்,
1. வளர்ந்து வந்த மராத்தியரின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவது.
2. ஷியா பிரிவைச் சேர்ந்த தக்காணச் சுல்தானியங்களானக் கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகியவற்றின் கிளர்ச்சிப் போக்கிற்கு அணைபோடுவது
3. தக்காணத்தை புகலிடமாகக் கொண்ட தனது மகன் இளவரசர் அக்பரின் கிளர்ச்சிகளை ஒடுக்குவது
4. ஷியா முஸ்லிம்களின் கலகங்களை ஒடுக்குவது.
A) அனைத்தும்
B) 1, 2, 3
C) 2, 3, 4
D) 1, 2, 4

103. பீஜப்பூரின் அடிச்சாஹி வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் __________ என்பவர் ஔரங்கசீப்பின் பல படையெடுப்புகளை எதிர்த்து நின்றார்.
A) அப்துல் ஹசன்
B) முகமது அடில்ஷா
C) சிக்கந்தர் அடில்ஷா
D) ஹசன் அடில்ஷா

104. கோல்கொண்டா சுல்தான் அப்துல் ஹசன் __________ ஆண்டு ஔரங்கசீப்பால் தோற்கடிக்கப்பட்டு கோல்கொண்டா கோட்டை கைப்பற்றப்பட்டது.
A) 1682
B) 1684
C) 1686
D) 1687

105. சிவாஜியை கைது செய்ய ஔரங்கசீப்பால் அனுப்பி வைக்கப்பட்ட தளபதிகள்
A) ராஜ் சிங், செயிஷ்டகான்
B) இந்திரசிங், செயிஷ்டகான்
C) ஹரிசிங், செயிஷ்டகான்
D) ஜெய்சிங், செயிஷ்டகான்

106. கொரில்லா போர் முறையைப் பின்பற்றி முகலாயர்களை எதிர்த்து போர் செய்த சிவாஜி மரணமடைந்த ஆண்டு
A) 1678
B) 1679
C) 1680
D) 1681

107. கூற்று 1: ஔரங்கசீப், அரியணைப் போட்டியில் தனக்கு எதிரான முக்கிய போட்டியாளரான தனது சகோதரர் தாராஷூகோவுக்கு சீக்கியர் உதவினர் என்ற காரணத்திற்காக அவர்களின் மீது வெறுப்புக் கொண்டார்.
கூற்று 2: ஔரங்கசீப்பின் உத்தரவின்படியே குரு தேஜ்பகதூர் கொல்லப்பட்டார்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

108. கோல்கும்பாஸ் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.
1. 1480 முதல் 1686 வரை பீஜப்பூரை ஆட்சி செய்த அடில்ஷாஹி மன்னர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.
2. அடர் சாம்பல் நிறக் கருங்கற்களால் கட்டப்பட்ட இதிலுள்ள 4 மூலைகளும் எண்கோண வடிவில் அமைந்துள்ளன.
3. கோல்கும்பாஸ் உலகின் இரண்டாவது பெரிய குவிமாடக் கட்டடமாகும்.
4. உயரமான இக்கட்டடம் 135 அடி சராசரி அளவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் 178 அடி உயர தளமேடை கொண்டதாகவும் உள்ளது.
A) 4 மட்டும் தவறு
B) 1, 2 தவறு
C) 3 மட்டும் தவறு
D) எதுவுமில்லை

109. சிவாஜியின் மகன் சாம்பாஜி __________ ஆண்டு ஔரங்கசீப்பால் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.
A) 1687
B) 1688
C) 1689
D) 1690

110. ஔரங்கசீப் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.
1. ஔரங்கசீப் 'ஜிஸியா' வரியை மீண்டும் விதித்தார்.
2. ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தில் புதிய கோவில்கள் கட்டவும், பழைய கோவில்கள் பழுது நீக்கவும் அனுமதிக்கவில்லை.
3. வழக்கமாக விதிக்கப்படும் நிலவரிக்கு மேலாக வசூலிக்கப்பட்ட 'அப்வாப்' என்னும் வரிவசூலை, அது ஷரியத் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தினார்.
4. ஒரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் இந்து அதிகாரிகள் அதிகமான எண்ணிக்கையில் அரசு நிர்வாகத்தில் பணியாற்றினர்.
A) 3 மட்டும் தவறு
B) 3, 4 தவறு
C) 4 மட்டும் தவறு

D) 2 மட்டும் தவறு

111. கூற்று 1: முகலாயர் ஆட்சியில் முக்காடம் என்றழைக்கப்பட்டக் கிராமத் தலைவர்கள் கிராமத்தின் நிர்வாக உறுப்பான பஞ்ச் (பஞ்சாயத்து) என்ற அமைப்பினை உருவாக்கினர்.

கூற்று 2: கிராம அளவில் வரிகளை வசூலிப்பதும் அவை தொடர்பான கணக்குகளைப் பராமரிப்பதும் இப்பஞ்சாயத்தின் பொறுப்பாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

112. __________ என்பவர் தன்னுடைய நூலில் முகலாயர் ஆட்சியில் ஜமீன்தார்கள் ஆவதற்கான தகுதிகளையுடைய சாதிகளைப் பட்டியலிட்டுள்ளார்.

A) அபுல் பைசி

B) அபுல் பாசல்

C) பாணினி

D) நூனிஸ்

113. அக்பருடைய ஆட்சிக் காலத்தில் _________ விழுக்காடுக்கும் மேற்பட்ட பிரபுக்கள் ரஜபுத்திரர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

A) 15

B) 20

C) 25

D) 30

114. கூற்று 1: ரஜபுத்திரர்கள் அரசு நிர்வாகத்திலிருந்த பல்வேறு பணியிடங்களுக்கு காயஸ்தர், கத்ரி சமூகத்தை சேர்ந்தவர்களை நியமித்தனர்.

கூற்று 2: ஜஹாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகியோர் மராத்தியரைப் பிரபுக்களாக நியமித்தனர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

115. புகையிலையும், மக்காச்சோளமும் _________ நூற்றாண்டில் இந்தியாவில் அறிமுகமாயின.

A) 15

B) 16

C) 17

D) 18

116. முகலாயர் காலத்தில் ரபி, காரிப் ஆகிய இரு வேளாண் பருவங்களில் பயிர்செய்யப்பட்டப் பயிர் வகைகளை_________நூல் பட்டியலிடுகிறது.

A) அக்பர் நாமா

B) அய்னி அக்பரி

C) பாதுஷா நாமா

D) ரசகங்காதரா

117. முகலாயர் காலத்தில் _________பட்டு உற்பத்தியில் பிரமிப்பூட்டும் வளர்ச்சியைப் பெற்று உலக சந்தைக்கு அதிகமான பட்டுத் துணியை அனுப்பிவைக்கும் தலைமை பட்டு உற்பத்தி மையமாயிற்று.

A) குஜராத்

B) ஆக்ரா

C) அகமது நகர்

D) வங்காளம்

118. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. முகலாயர் காலத்தில் முஸ்லீம் மணப்பெண்கள் திருமணத்தின்போது 'மகர்' எனும் பணப்பரிசை பெறுவதற்கு உரிமை பெற்றிருந்தனர்.

2. முகலாயர் ஆட்சியில் கிணற்று நீர்ப்பாசனமே முக்கியப் பாசன முறையாக இருந்தது.

3. முகலாய ஆளும் வர்க்கத்தாருக்கு நிலவரியே மிக முக்கியமான வருவாயாகும்.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

119. தோடர்மாலால் அறிமுகம் செய்யப்பட்ட ஜப்தி முறையை பிரகடனம் செய்த முகலாய மன்னர்

A) அக்பர்

B) ஜஹாங்கீர்

C) ஷாஜகான்

D) ஔரங்கசீப்

120. முகலாயர் காலத்தில் __________ என்னும் தொழிற்கூடங்களில் விலையுயர்ந்த கைவினைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

A) பர்கானா

B) கர்கானா

C) பஞ்சாரா

D) சைன்

121. முகலாயர் கால வர்த்தகம் குறித்த கூற்றுகளில் சரியானதை தேர்ந்தெடு.

1. அரிசி, சர்க்கரை, மஸ்லின் பட்டு, உணவு தானியம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் வங்காளம் முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

2. சோழமண்டலக் கடற்கரை, தனது பருத்தித் துணி உற்பத்திக்காகப் புகழ்பெற்றிருந்தது.

3. காஷ்மீர் சால்வைகளும் தரைவிரிப்புகளும் கைவினைப் பொருட்களின் உற்பத்திக்குப் பெயர் பெற்றிருந்த லாகூரிலிருந்து விநியோகமாகின.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

122. முகலாயர் காலத்தில் பொருட்கள் இடம் விட்டு இடம் செல்வதற்கு ____________ என்றழைக்கப்பட்ட கடன் பத்திரங்கள் உதவின.

A) சராய்

B) பஞ்சாரா

C) சைன்

D) உண்டி

123. தவறான இணையைத் தேர்ந்தெடு. (வணிக சமூகத்தினர்)

A) வங்காளம் – போராமுஸ்லிம்கள்

B) ரஜபுதனம் – மார்வாரிகள்

C) சோழமண்டல கடற்கரை – செட்டியார்கள்

D) மலபார் – முஸ்லீம்கள்

124. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.

A) இராமர் வழிபாட்டு மரபை தனது புகழ்பெற்ற பக்திப் பாடல்கள் வழி முன்மொழிந்த துளசிதாசர் (ராமசரிதமனஸ்) இராமரைக் கடவுளின் அவதாரமாகக் சித்தரித்தார்.

B) வல்லபாச்சாரியார் அவருடைய மகன் வித்தால் நாத் ஆகியோர் கிருஷ்ண வழிபாட்டை பரப்புரை செய்தனர்.

C) சூர்தாஸ் சூர் – சராவளி என்னும் இலக்கியத்தை உள்ளூர் மொழியில் எழுதினார்.

D) ஏகநாதர், துக்காராம் ஆகியோர் வங்காளத்தை சேர்ந்த பக்தி இயக்கக் கவிஞர்களாவர்.

125. வியாசரால் பிரபலப்படுத்தப்பட்ட 'தசருதா' இயக்கம் எப்பகுதியை சேர்ந்த பக்தி இயக்கம்?

A) தமிழ்நாடு

B) கர்நாடகா

C) ஆந்திரா

D) வங்காளம்

126. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) கபீர் – நெசவாளர்

B) ரவிதாஸ் – தோல் பதனிடும் தொழிலாளி

C) சைன் – சிகையலங்காரத் தொழில்

D) தாது – நெசவாளர்

127. கூற்று 1: சீக்கியரின் புனித நூலான குரு கிரந்த சாகிப் இஸ்லாமிய மத குருவான ஷேக் பரித், பக்தி இயக்கப் புலவர்களான நாமதேவர், கபீர், சைன், ரவிதாஸ் ஆகியோரின் போதனைகளை உள்ளடக்கமாய்க் கொண்டுள்ளது.

கூற்று 2: "கடவுள் ஒருவரே" என குரு நானக் நம்பினார். அக்கடவுள் உருவமற்றவர், எங்கும் நிறைந்திருப்பவர் என கூறினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

128. டேனியர்களின் ஆதரவின் கீழ் முதல் லூத்தரன் மத பரப்பாளர்கள் ___________ ஆண்டு தரங்கம்பாடிக்கு வந்தனர்.

A) 1702

B) 1705

C) 1706

D) 1709

129. ஐரோப்பாவிலிருந்த பல்கலைக் கழகங்களுக்கு நிகராக இந்தியாவில் கல்வி நிறுவனங்கள் இல்லை என கூறிய பிரான்ஸ் நாட்டு பயணி

A) ராபர்ட் – டி – நோபிலி

B) பெர்னியர்

C) அல்புகர்க்கு

D) அல்மெய்டா

130. பாஸ்கராச்சாரியாரின் புகழ்பெற்ற கணித நூலான லீலாவதியை மொழிப்பெயர்த்த அக்பர் அவைக்களப் புலவர்

A) ராஜா தோடர்மால்

B) அபுல் பாசல்

C) பெய்சி

D) பெர்னியர்

131. நீர் இறைப்பதற்காகப் பல பீப்பாய்கள் இணைக்கப்பட்ட சக்கரமான பாரசீகச் சக்கரம் யாருடைய காலத்தில்இந்தியாவில் அறிமுகமானது?

A) அக்பர்

B) ஹூமாயூன்

C) ஷாஜகான்

D) பாபர்

132. கப்பலின் ஒட்டகம் என சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் மனிதர்

A) அக்பர்

B) ஹூமாயூன்

C) ஷாஜகான்

D) பாபர்

133. "தொழில்நுட்பத்தில் இந்தியாவின் பின் தங்கிய நிலை வெளிப் படையாகத் தெரிகிறது. இந்தியப் படைகளில் மேட்ச் லாக் எனப்படும் பழைய பாணியிலானத் துப்பாக்கிகள் அதிகமான பயன்பாட்டில் இருந்தபோது ஐரோப்பாவில் பிளின்ட்லாக் எனப்படும் நவீனத் துப்பாக்கிகள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. செலவு மிக்க செம்பிலான பீரங்கிகளை இந்தியா தொடர்ந்து பயன்படுத்தி வந்தபோது ஐரோப்பாவில் முன்னதாகவே அவை பயன்பாட்டிலிருந்து நீங்கிவிட்டன. இதற்கு காரணம் 17ஆம் நூற்றாண்டில் கூட இந்தியாவால் வார்ப்பிரும்பை உற்பத்தி செய்ய இயலாமல் போனதேயாகும்' என்று கூறியவர்

A) இர்பான் ஹபீப்

B) பெர்னியர்

C) அல்புகர்க்கு

D) அல்மெய்டா

134. கூற்று 1: மணற்பாறைகளால் கட்டப்பட்ட ஆக்ரா கோட்டை ரஜபுத்திர பாணிகளை இணைத்து கட்டப்பட்டதற்கு ஒரு எடுத்துக்காட்டாய் திகழ்கிறது.

கூற்று 2: ஆக்ராவுக்கு அருகே சிக்கந்தராவிலுள்ள அக்பரின் கல்லறை மாடம் சில பௌத்த கட்டடக்கலைக் கூறுகளையும் கொண்டுள்ளது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

135. முகலாயர் காலத்திய முதல் வெள்ளை நிறப் பளிங்கு கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

A) தாஜ்மகால்

B) புராணகிலா

C) சசாரம்

D) இதிமத் உத் தௌலா கல்லறை

136. யாருடைய காலத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் சிகரத்தை எட்டியது?

A) ஜஹாங்கீர்

B) ஷாஜகான்

C) அக்பர்

D) ஔரங்கசீப்

137. வெடியுப்பை பயன்படுத்தி நீரைக் குளிர்விக்கும் முறையைப் பரவலாக்கிய பெருமை __________ ஐச் சாரும்.

A) அக்பர்

B) ஹுமாயூன்

C) ஷாஜகான்

D) பாபர்

138. யாருடைய காலத்தில் லாகூரில் பாதுஷாகி மசூதி கட்டப்பட்டது?

A) ஜஹாங்கீர்

B) ஷாஜகான்

C) அக்பர்

D) ஔரங்கசீப்

139. முகலாயர் கால ஓவியக்கலை குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.

A) இந்தியா வந்த நுண் ஓவியக் கலைஞர்களான அப்துல் சமத், மீர் சையத் அலி ஆகியோரிடமிருந்து இந்திய ஓவியர்கள் ஊக்கம் பெற்றனர்.

B) தஷ்வந்த், பசவன் ஆகியோர் பாபரின் அவையை அலங்கரித்த முக்கிய ஓவியர்களாவர்.

C) ஜஹாங்கீர் காலத்தில் உருவுப் படத்தை வரைதலும் விலங்குகளை வரைவதும் வளர்ச்சி பெற்றன.

D) முகலாய நுண்ணோவியங்கள் டச்சு நாட்டின் தலைச்சிறந்த ஓவியரான ரெம்பிராண்ட் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.

140. பல மெல்லிசைப் பாடல்களை இயற்றிய குவாலியரை சேர்ந்த தான்சென் ஏனைய 35 இசைக் கலைஞர்களோடு ___________ ஆல் ஆதரிக்கப்பட்டார்.

A) அக்பர்

B) ஹுமாயூன்

C) ஷாஜகான்

D) ஔரங்கசீப்

141. கூற்று 1: ஜஹாங்கீரும் ஷாஜகானும் இசையை ஆதரித்தனர். ஔரங்கசீப் இசைக்கு எதிரானவராகத் திகழ்ந்தார்.

கூற்று 2: பாபர் நாமா, பாதுஷா நாமா ஆகிய நூல்களில் இசைக்கருவிகளோடு பெண்கள் நடனமாடும் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

142. முகலாயப் பேரரசிலும் தக்காண அரசுகளிலும் __________மொழி நிர்வாக மொழியாக இருந்தது.

A) சமஸ்கிருதம்

B) பாரசீகம்

C) உருது

D) தெலுங்கு

143. அக்பர் நாமா என்னும் நூலில் அக்பரின் வரலாற்றை தொகுத்து வழங்கியவர்

A) அக்பர்

B) முகமது காஸிம்

C) அபுல் பாசல்

D) முகமது வாரிஸ்

144. ஔரங்கசீப்பின் முதல் பத்தாண்டு கால ஆட்சியைப் பற்றி விளக்கும் ஆலம்கீர் நாமா என்னும் நூலை இயற்றியவர்

A) முகமது வரிஸ்

B) முகமது காஸிம்

C) அபுல் பாசல்

D) முகமது காஸிம்

145. ___________ என்னும் நூல் பல்வேறு மதங்களின் நம்பிக்கைகள், அம்மதங்கள் தொடர்பான நூல்கள் ஆகியன குறித்துப் பாரபட்சமற்ற விபரங்களைக் கொண்டுள்ளது.

A) அக்பர் நாமா

B) பாதுஷா நாமா

C) தபிஸ்தான்

D) சர் – இ – அக்பர்

146. உபநிடதங்களை 'சர் – இ – அக்பர்' (மாபெரும் ரகசியம்) என்னும் பெயரில் மொழிப்பெயர்த்த அக்பர் அவைக்களப் புலவர்

A) ராஜா தோடர்மால்

B) அபுல் பாசல்

C) தாராஷூகோ

D) பெர்னியர்

147. யாருடைய மேற்பார்வையில் மகாபாரதம் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது?

A) முகமது வரிஸ்

B) முகமது காஸிம்

C) அபுல் பெய்சி

D) முகமது காஸிம்

148. கல்ஹனார் காஷ்மீரின் முழுமையான வரலாறு குறித்து எழுதிய நூல்

A) தஜிகனிலகந்தி

B) ரசகங்காதரா

C) ராஜவலிபதகா

D) மஸ்னாவி

149. தஜிகனிலகந்தி என்னும் வானியல் ஆய்வு நூலைப் படைத்த நீலகண்டர் யாருடைய வானியலறிஞராக திகழ்ந்தார்?

A) அக்பர்

B) ஹுமாயூன்

C) ஷாஜகான்

D) ஔரங்கசீப்

150. கூற்று 1: அப்துர் ரகீம் கான் – இ – கானான் என்பவர் வாழ்க்கை குறித்த மனித உறவுகள் தொடர்பான பாரசீகர்களின் சிந்தனைகள் இழையோடும் பக்திப் பாடல்களை இந்தியின் கிளை மொழியான பிரிஜி என்னும் வடிவத்தில் எழுதினார்.

கூற்று 2: கிழக்கு உத்திரப்பிரதேசத்து மக்கள் பேசிய இந்தி மொழியின் வட்டார மொழியான அவதியில் துளசிதாசர் எழுதிய பாடல்கள் அவற்றின் பக்திச் சிந்தனைகளுக்காகப் பிரபலமாயின.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

151. மாபெரும் சைவப் புலவரான குமரகுருபரர் __________ நூற்றாண்டின் பிற்பகுதியில் காசி சென்று வந்ததாகக் கூறப்படுகிறது.

A) 15

B) 16

C) 17

D) 18

152. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் தனது அமுக்தமால்யதா மூலமாகவும், அவருடைய அவைக்களப்புலவரான அல்லசானி பெத்தண்ணா தனது 'மனுசரித்திரா' எனும் நூலின் மூலமாகவும் தெலுங்கு இலக்கியத்தின் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றனர்.

2. அஸ்ஸாமிய மொழியில் பக்திப் பாடலை முன்மாதிரியாகக் கொண்டு சங்கர தேவர் ஒரு புதிய இலக்கியமரபை உருவாக்கினார்.

3. கிருஷ்ணருக்கும் ராதைக்குமான காதலைச் சித்தரிக்கும் கவிதைகளை கொண்ட சைதன்ய வழிபாட்டு முறை வங்காள இலக்கியத்தை மேம்படுத்தியது.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

153. கீழே உள்ள ஆட்சியாளர்களுள் யார் அக்பரின் சமகாலத்தவர் இல்லை?

A) இங்கிலாந்தின் எலிசபெத்

B) ஷேக்ஸ்பியர்

C) பிரான்ஸின் நான்காம் ஹென்றி

D) இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணி

154. ஜஹாங்கீர் மற்றும் ___________ அமைத்த ஷாலிமர் தோட்டங்கள், இந்திய தோட்டக்கலையில் குறிப்பிடத்தக்கவையாகும்.

A) அக்பர்

B) ஷாஜகான்

C) ஹுமாயூன்

D) ஔரங்கசீப்